போடியிலுள்ள விவசாய நிலங்களுக்கு யானைகளால் ஏற்பட்ட சேதம்.

*வினா எண். 143—திரு. கே. எம். எஸ். சுப்பிரமணியன் : மாண்புமிகு செய்தி-அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) கேரளாவிலிருந்து தேவாரம்மெட்டு, போடிமெட்டு மலைப்பகுதி வழியாக கேரள யானைகள் வந்து போடியில் உள்ள விவசாயப்பகுதிகளை சேதம் செய்வது பற்றி அரசு கவனத்திற்கு வந்துள்ளதா?

(ஆ) அவ்வாறு சேதம் ஏற்படாமல் தடுக்க அரசு எடுத்த நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : (அ) ஆம். 31—12—1978 ஆம் நாள் பரமசிவம்கோவில்கிராமம் பாதிக்கப்பட்டதாக உத்தமபாளையம் தாசில்தார் அறிக்கையும் 23—10—1979 ஆம் நாள் தொட்டிபுரம் கிராமம் பாதித்ததாக பொட்டிபுரம் ஊராட்சி மன்ற முன்னாள் உபதலைவரிடமிருந்தும் 28—2—1980 ஆம் நாள் அகமலை கிராமம் பாதிக்கப்பட்டதாக கிராம விவசாய சங்கத் தலைவரிடமிருந்தும் முறையீடுகள் வந்துள்ளன.

(ஆ) மேற்கூறிய யானைகள் தாக்கியதன் காரணமாக விவசாயிகளுக்கு ஏற்பட்ட சேதம் மிகச் சொற்பம்தான். யானைகளைக் காட்டிற்குள் விரட்டியடிக்க கிராம மக்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. மேலும் தேவையான உதவிகளை காட்டிலாக்கா ஊழியர்கள் செய்து கொடுத்துள்ளார்கள்.

(பிற்பகல் 9—10)

திரு. கே. எம். எஸ். சுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மாதிரி வருஷந்தோறும் கோடைக் காலத்திலே யானைகள் கேரளாவிலிருந்து தமிழ் நாட்டிற்கு வந்து இங்கு பயிராகிற விளை நிலங்களை அழிக்கின்றன. அவை நிரந்தரமாக வராமல் தடுக்க அரசு ஏதேனும் திட்டம் வைத்திருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காடுகளுக்குள்ளே வாழ்கிற விலங்கினங்கள் ஒவ்வொரு பருவ காலத்திலேயும் ஓரிடத்திலிருந்து வேறோரிடத்திற்குப் பயணம் செய்வது என்பது வழக்கமாக இருந்து வருகிற ஒன்றாகும். சில நேரங்களில் சில பகுதிகளில்

தண்ணீர் கிடைக்கவில்லையானால், தண்ணீர் கிடைக்கிற பகுதியை நோக்கி யானைகளும் மற்ற விலங்கினங்களும் செல்கின்றன. ஆகவே, இயற்கையான அந்தச் சூழ்நிலையைப் பாதுகாக்கத்தான் அரசாங்கம் முயற்சி எடுக்கிறதே தவிர, அதை அழிப்பதற்கோ தடுப்பதற்கோ முயற்சி எடுக்க முடியாது.

திரு. கே. எம். எஸ். சுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேரளாவிலிருந்து வரக்கூடிய யானைகள் திரும்பிச் செல்லும்போது தமிழ் நாட்டு மலைப்பகுதிகளிலே இருக்கக்கூடிய நமது யானைகளையும் சேர்த்து அழைத்துச் செல்வதாக அறிகிறோம். அப்படியிருக்கும்போது இங்குள்ள யானை வளம் குறைகிறது. அதைத் தடுப்பதற்காக கேரள, தமிழ்நாடு அரசுகள் பேச்சுவார்த்தைகள் நடத்துவது பற்றிய குறிப்புகள் ஏதாவது இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவர் அவர்களே, யானைகளைப் பொறுத்தவரை அவை கேரள யானை அல்லது தமிழ்நாட்டு யானை அல்லது கர்நாடக யானை என்று பிரிக்க முடியாது. அவைகளெல்லாம் தொடர்ந்து மலைப்பகுதிகளிலே, காடுகளிலே வசித்து வருகின்றன. ஆகவே, இந்த மூன்று மாநிலங்களிலும் இந்த யானைகள் போக்குவரத்தும் வைத்துக் கொண்டிருக்கின்றன, உறவையும் வைத்துக் கொண்டிருக்கின்றன. ஆகவே, அந்த உறவைப் பிரிப்பது நம் இயற்கையைப் பிரிப்பது போலாகும். அந்தப் பாவத்திற்கு நாம் ஆளாகக் கூடாது.

மண்வளப் பாதுகாப்புத் திட்டங்களுக்கான நீண்டகாலக் கடன்கள்.

*வினா எண். 144—திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேளாண்மைப் பொறியியல் துறையில் மண்வளப் பாதுகாப்பு திட்டப் பிரிவு வேலைக்காக, விவசாயிகளுக்கு நீண்ட காலக் கடன் திட்டத்தில் கடன் வழங்கப்படுகிறதா ?

(ஆ) ஆம் எனில், என்ன வேலைகளுக்காக கடன் வழங்கப் படுகிறது ?

(இ) எவ்வளவு கடன் வழங்கப்படுகிறது ?

(ஈ) உயர்த்தும் உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : (அ) ஆம்.